# 8 துணை உதவிக் குறிப்புகள்

# வெள்ளப் பெருக்குச் சம்பந்தமாக நீங்கள் இப்பொழுது செய்யக்கூடியவை

**1** உங்கள் இடர் வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள்.




**2** எங்கே போகவேண்டும் என்பதை விளங்கிக்கொள்ளுங்கள்.



**3** யாரைத் தொலைபேசியில் அழைக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.




**4** உங்கள் திட்டத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.



**5** அடிப்படை அவசர செயற் கருவிகலத் தொகுதி ஒன்றைத் தயாரியுங்கள்.




**6** எப்பொழுது செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.



**7** உங்கள் காப்புறுதியைச் சரிபார்க்கவும்.




**8** உள்ளூர் ஏபிசி (ABC) வானொலி நிலையத்தின் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளவும்.



SES
NSW STATE EMERGENCY SERVICE

Tamil

# வெள்ளப் பெருக்குச் சம்பந்தமான தயாரிப்புகளுக்கு நீங்கள் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள்.

### 1. உங்கள் இடர் வாய்ப்புக்களை அறிந்துகொள்ளுங்கள்.

- வெள்ளப் பெருக்குகள் பாதுகாப்பானவை அல்ல, கொல்லக்கூடியவை.
- வெள்ளப் பெருக்குகளால் தொலைபேசித் தொடர்புகள், நீர், மின்சாரம்; சாக்கடை மற்றும் எரிவாய்வு ஆகியவை துண்டிக்கப்படும்.
- வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட வரலாற்றையும் உயரங்களையும் உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து தெரிந்துகொள்ளவும்.
- அவ்வாறான இடங்களில் நீண்ட காலம் வாழ்ந்தவர்களிடம் உள்ளூர் இடர் வாய்ப்புக்களை உரையாடி அறியவும்.
- வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடிய அறிகுறிகளை அதாவது பாரிய மழை வீழ்ச்சி மற்றும் பாய்ந்து வரும் அல்லது உயர்ந்து வரும் நீர் ஓட்டம் ஆகிய அறிகுறிகளில் அவதானம் செலுத்தவும்.
- மேலதிக தகவல்களுக்கு நியூ சவுத் வேல்ஸ் அரச அவசர சேவை இணையத்தளம் www.ses.nsw.gov.au என்பதைப் பார்க்கவும்.

### 2. எங்கே போகவேண்டும் என்பதை விளங்கிக்கொள்ளுங்கள்.

- வெள்ளப் பெருக்கின்போது வாகனம் ஓட்டுதல், நடத்தல் ஆகியனவற்றைச் செய்யவேண்டாம். பாதுகாப்பான வழியைக் கண்டுகொள்ளவும்.
- வெள்ளப்பெருக்கு ஏற்படாத பகுதியிலுள்ள நண்பர்கள் அல்லது இனத்தவர்கள் ஆகியோரிடம் தங்குவதுபற்றி உரையாடவும்.
- நீங்கள் வெளியேறவேண்டிய தேவை ஏற்பட்டால் ஆபத்தில்லாத பிரயாணஞ்செய்யக்கூடிய வழியைக் கவனத்திற் கொள்ளவும்.

### 3. யாரைத் தொலைபேசியில் அழைக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

- அவசர தொலைபேசி அழைப்பிற்கான இலக்கங்களின் பட்டியல் ஒன்றைத் உங்களுடைய தொலைபேசியில் அல்லது பக்கத்தில் வைத்திருங்கள்.
- வெள்ளப் பெருக்கு அல்லது புயல் ஏற்படும்பொழுது தேவைப்படும் அவசர உதவிக்கு நியூ சவுத் வேல்ஸ் அரச அவசர சேவையை 132 500 என்ற இலக்கத்தில் அழையுங்கள்.
- உயிர் ஆபத்துச் சம்பந்தமான அவசர சேவைக்கு 000 என்ற (மூன்று பூஜ்யங்களை) அழைக்கவும்.

### 4. உங்கள் திட்டத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

- வெள்ளப் பெருக்குகளுக்கான உங்கள் திட்டத்தை உங்கள் குடும்பத்துடனும் மற்றும் அயலாருடனும் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- நீங்கள் ஒரு வர்த்தகம் வைத்திருந்தால் உங்கள் வர்த்தக அயலாருடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.
- உங்கள் திட்டத்தை கால முறைப்படி பயிற்சிக்கவும்.

### 5. அடிப்படை அவசர செயற் கருவிகலத் தொகுதி ஒன்றைத் தயாரியுங்கள்.

- அவசர செயற்கருவித் தொகுதியுடன் கொண்டுசெல்லக்கூடிய மின்கலத்தால் இயங்கும் வானொலி, மின்பொறிக் கைவிளக்கு, மிகைப்படியான மின்கலங்கள், முதலுதவிக் கருவித் தொகுதி, மெழுகுவர்த்திகள், நீரில் நனையாத தீக்குச்சிகள், முக்கியமான பத்திரங்கள், அவசரகாலத் திட்டம், அவசரத் தொடர்புத் தொலைபேசி இலக்கங்கள், நீரில் நனையாத பை.
- உங்களுடைய அவசர செயற்கருவித் தொகுதியை இலகுவில் கண்டெடுக்கக் கூடிய இடத்தில் வைக்கவும்.

### 6. எப்பொழுது செயற்படவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

- கால நிலையைத் தொடர்ந்து கவனித்துக்கொள்ளுங்கள். - ள்ளப்பெருக்குக் கண்காணிப்புகளும் முன்னெச்சரிக்கைகளும் வானிலை அவதான அமைப்பினால் வெளியிடப்படும். www.bom.gov.au/nsw/warnings
- வெளியேற்ற அறிவிப்புகளில் கொடுக்கப்படும் வழிகாட்டல்களுக்கமைய நடந்துகொள்ளுங்கள் - அவ்வாறு செய்யாதுவிடின் நீங்களும் உங்கள் குடும்பமும் ஆபத்துக்குள்ளாவீர்கள்.

### 7. உங்கள் காப்புறுதியைச் சரிபார்க்கவும்.

- காப்புறுதி செய்திருப்பின் அது செல்லுபடியாகுமா என்பதையும் தங்களுடைய நிலைமைக்கும் ஆபத்திற்கும் ஏற்றதா என்பதையிட்டும் சரிபார்க்கவும்.

### 8. உள்ளூர் ஏபிசி (ABC) வானொலி நிலையத்தின் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளவும்.

- அவசரகாலநிலையின்போது உள்ளூர் அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (ABC) வானொலி நிலையம் அவசரகால முன்னெச்சரிக்கைகள், தகவல்கள் மற்றும் தற்போதைய நிலைமைகள் ஆகியனவற்றையிட்டு ஒலிபரப்பும்.
- நீங்கள் மின்கலத்தால் இயங்கும் வானொலிக் கருவி வைத்திருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

NSW STATE EMERGENCY SERVICE
(நியூ சவுத் வேல்ஸ் அரச அவசர சேவை)

Principal Partner NRMA INSURANCE

**வெள்ளப்பெருக்கு மற்றும் புயல் ஆகியவற்றின்போது அவசர உதவிக்கு அழைக்கவேண்டிய இலக்கம்.**

## 132 500

உயிர்ப் பயம் பற்றியதான அவசர சேவைக்கு 000 என்ற (மூன்று பூஜ்யங்களை) அழைக்கவும்.

**மேலதிக தகவல்களுக்கு www.ses.nsw.gov.au என்பதைப் பார்க்கவும்.**

#NSWSES /NSWSES /NSWSES